"*Punters' Agency*".

* 237 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Chief Minister be pleased to state :

(*a*) whether the Commissioner of Police in Madras, has issued restrictions on Punters' Agency ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ), & (இ) ஹைதராபாத், பெங்களூர், பம்பாய் ஆகிய இடங்களில் நடைபெறும் குதிரைப் பந்தயங்களில் ஐந்து பந்தய முடிவு நிகழ்ச்சிக்கும் (Jackpot) மூன்று பந்தய முடிவு நிகழ்ச்சிக்கும் (Treble) பணயம் கட்ட சென்னை மாநகரில் முகவர்களாகப் பணியாற்றலாமா என்று சிலர் விசாரித்ததில், இச்செயல் சென்னை மாநகர்க் காவல் சட்டத்தின் விதித்துறைகளின் கீழ் தடை செய்யப்பட்டிருப்பதால், இத்தகைய செயல் சட்டத்திற்குப் புறம்பானதாகும் என்று அவர்களுக்குக் காவல்துறைக் கமிஷனர் தெரிவித்தார்.

திரு. என். டென்னிஸ்: தலைவரவர்களே, குதிரைப் பந்தயம் போன்றவற்றிற்கு வீணாகப் பணத்தைச் செலவிடும் சாமானிய மக்களை அதிலிருந்து விடுவிப்பதற்கு அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இப்போதுள்ள சூழ்நிலையில் சாமானிய மக்கள்தான் அதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, are the Government aware that there are many unofficial punters agencies working not only in Madras but throughout the country for the Madras Race Club and there is heavy betting going on resulting in heavy loss of revenue to the Government because of the abolition of the bookies in the Madras Race Club ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அங்கீகாரம் இல்லாமல், அதிகார பூர்வமற்ற நவீன ஏஜெண்டுகள் பல பேர் இருக்கலாம். ஆனால் அவர்களெல்லாம் கண்டுபிடிக்கப்பட்டால் கடும் தண்டனைக்கு ஆளாகும் அளவுக்குக் குற்றம் சாட்டப்படுகிறார்கள். அவர்களைப்பற்றி விவரம் ஏதாவது தெரிந்தால், அதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் நடவடிக்கை எடுக்கலாம்.